[1973 மார்ச் 5

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் திருக்குறள் நல்லமுறையிலே எழுதியிருக்க வேண்டுமென்று, அது பயணிகளுக்கும், அதைப் போலவே ஓட்டுநர்களுக்கும் தெரிகிற வகையில் அமைய வேண்டுமென்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆனால் அதற்குமேல் தனிப்பட்ட முறையிலே சிலபேர் படங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால், அது பணியாற்றுகின்ற தொழிலாளர்களிலே இன்னும் சிலபேர் அந்த நம்பிக்கையிலே தங்களை ஆட்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. ஆனால் அதுவும் கூடாது என்பதுதான் அரசின் கொள்கை. இந்த இருபதாம் நூற்றாண்டுக் காலத்திலும்கூட இன்னும் சுவாமி படங்களை வைத்துப் பூசைபோட்டுக் கொண்டிருப்பது எந்தவிதத்திலே உகந்தது என்பதை பகுத்தறிவோடு தொழிலாளர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மே. சி. தூயமணி : தலைவரவர்களே, அரசாங்கப் பேருந்துகளில் ஒருபுறத்தில் திருக்குறள் எழுதப்பட்டிருப்பதைப் போன்று மீதமிருக்கும் மூன்று புறங்களிலேயும் அண்ணாவின் பொன் மொழிகளையும், காந்தியாரின் பொன் மொழிகளையும் பொறிக்கின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே. அண்ணாவின் பொன்மொழிகளையும், காந்தியடிகளின் பொன் மொழிகளையும் இப்பொழுது பஸ்களிலே பொறிப்பதாக உத்தேசம் இல்லை. ஆனால் உறுப்பினர்கள் அதை பஸ்களிலே பொறிக்க வேண்டுமென்று சொல்வதைவிட, இதயங்களிலே தாங்கிக் கொள்வது மேலானது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், பஸ்களிலே திருக்குறளை எழுதுவதற்கு எவ்வளவு செலவாயிற்று? அதைச் சரிபார்ப்பதற்கு எவ்வளவு செலவாகும் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அறிவுப் பணியைச் செய்வதற்கு வரவு-செலவுக் கணக்குப் பார்ப்பது கிடையாது.

1973 மார்ச் 5]

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : தலைவரவர்களே, இந்த அரசுப் பஸ்களில் திருக்குறள் எழுதியிருப்பதைப்போன்று, பி.ஆர்.சி., சேரன் போக்குவரத்து, சோழன் போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த பஸ்களிலும் இப்படிப்பட்ட திருக்குறளை எழுதுவதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன யோசனை அந்தப் போக்கு வரத்துக் கழகங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும். மு.ப 9–30

திரு. ஆர். கோவிந்தராசன் : சோழ, பல்லவா போக்கு வரத்து பேருந்துகளில் ஓட்டுநர் பின்னால் ஒரு பலகையை வைத்து ஓட்டுநர் ஒருவரின் பெயரை எழுதி வைத்திருக்கிறார்கள். சில நேரங்களில் ஓட்டுநர் மாற்றப்படும் போது பெயரும் மாற்றப்படு கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஓட்டுநர் மாறும் போது பெயரும் மாறும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் என்னைவிட நன்றாக அறிவார்கள்.

திரு. நா. வீராசாமி : பஸ்களில் எழுதப்பட்டிருக்கும் திருக் குறளுக்குப் பொருள் தெரியாத பலபேர் வெளியே மேடைகளில் நாம் செய்யும் செலவைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தக் குறளின் பொருளை எழுத அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இதிலே 'பொருள்' என்பது இருவகையிலும் பொருத்தமாக இருக்கிறது. இதிலே பொருட் செலவைப் பற்றிக் கவலைப்படுவதை விட திருக்குறள் எழுதுவதைச் சிறந்த பெரும் பொருளாகக் கொள்ளுவதுதான் சாலச் சிறந்தது.

திரு. எஸ். வடிவேல் : பேருந்துகளில் திருக்குறள் பொறிக்கப் பட்டிருப்பது போல் பாரதியார், பாரதிதாசன் பாக்களையும் பொறிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேருந்தில் உலகப் பொது மறையாகிய திருக்குறளை எடுத்து எழுதுவதன் மூலம் அதிலே எல்லாக் கருத்துக்களும் அடங்கியிருக்கின்றன என்ற

அடிப்படைக் கொள்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதற்கு மேல் பாரதியார், பாரதிதாசன், மற்றப் புலவர்கள் கவிதைகளை எழுதுவோமானால் பஸ்கள் பஸ்களாக இருக்காது, பள்ளிக்கூட அறைகளாக மாறிவிடும் என்பதை மறந்துவிடக் கூடாது.

திரு. கோ. இளங்கோவன் : பேருந்துகளில் எழுதப்படுகின்ற குறட்பாக்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றனவா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஒவ்வொரு குறளும் மணியான குறள்கள். அதிலே தெரிந்தெடுக்க அவசியமில்லை.

திரு. த. சோனையா : நகர பஸ்களில் திருக்குறள் எழுதியதால் ஆன செலவு அதிகமா அல்லது அதைப் படித்துப் பயன் பெற்ற மக்கள் பலன் அதிகமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்தக் கேள்வி பஸ் பயணிகளைப் பொறுத்தது. அவர்கள் எவ்வளவு அதிகமாக இருக்கிறார்களோ அதைப் பொறுத்தது.

திரு. ஆ. பரந்தாமன் : இரவு நேரங்களில் இந்தக் குறள்கள் சரியாகத் தெரிவதில்லை. இதற்காக விளக்குப் போட அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பகல் நேரங்களில் படித்துப் பயன் பெற்றாலே போதுமானது.

திரு. எம். சுரேந்திரன் : திருக்குறள் எழுதுகின்ற கணக்குப் பார்ப்பது நல்லதல்ல என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அரசாங்கம் செய்கின்ற ஒவ்வொரு காரியத்தையும் கணக்குப் பார்த்துச் செய்வதுதான் சரியானது. செய்யப்பட்ட காரியத்திற்கு எவ்வளவு பலன் வந்திருக்கிறது. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியாகப் போடுங்கள்.

திரு. எம். சுரேந்திரன் : அதை மறுபடியும் விரிவுபடுத்துவது பற்றி யோசிக்கப்பட்டிருக்கிறதா ? எந்த முறையில் இது மக்களுக்கு எவ்வளவு தூரம் பயன்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் பரிசீலித்தார்களா ? அந்த இடத்தில்